அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

மார்ச் – 2024 | மரம் – 3 | கன்று – 3 | ஆண்டு சந்தா ரூ.250/- | தனிப்பிரதி ரூ.25/- | ஆயுள் சந்தா ரூ.2500/-




ஆசிரியர். ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

# மனம் விட்டு உங்களுடன்...

## ஒலிவமரக் கன்றுகள் இதழின் வாசகர்களே! ஆதரவாளர்களே!

மார்ச் மாத இதழின் வழியாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இவ்விதழ் உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கிறது என்று பலரது கடிதங்கள் வாயிலாக அறிகிறேன். தொடர்ந்து இவ்விதழின் வளர்ச்சிக்காக உங்கள் ஜெப ஆதரவையும், பங்களிப்பையும் எதிர்பார்க்கிறேன்.

கர்த்தருக்கு பயப்படுகிறவர்களுக்கு திடநம்பிக்கை உண்டு. உங்கள் மேல் இருக்கும் தேவ ஆவியும், உங்கள் வாயில் அவர் வைத்துள்ள அவர் வார்த்தைகளும் உங்கள் வாயினின்றும் நீங்குவதில்லை என்பதை அறிந்து உங்களுக்கு பிரதானமாய் சொல்லுகிற புத்தி என்னவெனில்:

ஐந்து அப்பமும் இரண்டு மீன்களும் நமது கைகளில் இருக்கும் வரை தான் அற்பமானவை! இயேசுவிடம் அவைகளை கொடுக்கும் போது அவை அற்புதமானவைகளாக மாறும்!

இந்த இளம் வயதில் சபலத்தின் மீது ஏணி சாய்க்காதீர்கள். அந்த ஏணிகளின் மீது உலக ஆசைகளை ஏற விட்டு அழகுபார்க்காதீர்கள்.

மடியில் கட்டிய நெருப்பு, உடையை எரிப்பது, எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு தூரம் மனதில் மூட்டிய உலக நெருப்பு ஆயுளை அழிப்பதும் நிச்சயம் என்பதை மறந்துவிட வேண்டாம்.

அவர் நம் மீது வைத்த பேரன்பின் காரணமாக மட்டுமே நிராகரிக்கப்பட வேண்டிய நம்மை இயேசு அரவணைத்தார். ஆனால் அரவணைக்க வேண்டிய அவரையோ உலகம் நிராகரித்துக் கொண்டிருக்கிறது என்பதை மனதில் வைத்து பள்ளி, கல்லூரிகளில் பயிலும் சக நண்பர்களுக்கும் வாழ்வில் இயேசுவின் தேவையை அவர்களுக்கு உணர்த்துங்கள்.

விதைகளை யார் வேண்டுமானாலும் விதைக்கலாம். விதைப்பவனின் தோற்றம் பார்த்து விதைகள் முளைத்து எழும்புவதில்லை.

ஆகவே நல்ல விதைகளை தொடர்ந்து விதையுங்கள். ஒருநாள் அவை வீரியமாக கிறிஸ்துவுக்கென கனிதரும் செடிகளாக முளைத்தெழும்பும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

உணவாக உட்செல்வது மனிதனை ஒருபோதும் மாசுபடுத்தாது. மாசுபடுத்தும் உணர்வுடன் வெளியே வருவதே மனிதனை தீட்டுப்படுத்தும் என்பதால் எண்ணங்களைக் குறித்தும், செயல்களைக் குறித்தும் மிகவும் கவனமாயிருங்கள். வார்த்தைகளை அன்பில் வார்த்தெடுங்கள். உங்கள் வாழ்க்கைக்கு இயேசுவே ஒளியானவர், அவரே வழியானவர். ஆகவே அன்றாடம் பாட நூல்களை படிப்பது போல வாழ்க்கைப் பயணத்திற்கான ஒளியைப் பெற்றுக்கொள்ள வழியைக் காட்டும் வேத வசனங்களைக் கற்பதை மறந்துவிடாதிருங்கள். உங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறேன்.



அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..

இயேசுவை கொல்கொதா என்று அழைக்கப்பட்ட மலையை நோக்கி நடக்கவைத்தார்கள். கொல்கொதா என்பதற்கு மண்டைஓடு என்பது பொருள்.

படைவீரர்கள் கூட்டத்தினரை விலக்கி வழி ஏற்படுத்த, நடக்கவே வலுவில்லாத குற்றுயிரான நிலையில் இயேசு பாரமான சிலுவையைச் சுமந்து கொண்டு மலையை நோக்கி நடந்தார். இயேசுவால் நடக்க முடியவில்லை. தடுமாறி விழுந்தார்.படைவீரர்கள் தங்கள் கைகளில் வைத்திருந்த சாட்டையால் அவரை அடித்தார்கள். இரண்டு பேர் அவரை எழுப்பி விட மீண்டும் சிலுவை அவருடைய தோளில் வைக்கப்பட்டது. இயேசு அரண்மனை வளாகத்தை விட்டு வெளியே வந்தார். வெளியே நன்றாக விடிந்திருந்தது.



விஷயம் எப்படியோ பரவிவிட்டிருக்க வெளியே பாமர மக்கள் ஏராளமானோர் குழுமியிருந்தார்கள். இயேசுவின் தீவிர சீடர்கள் தலைமறைவாகிவிட்டிருக்க, இயேசுவின் போதனைகளில் ஈர்க்கப்பட்ட பாமர மக்கள் அவருக்காகக் கண்ணீர்விட்டார்கள். இயேசு தொடர்ந்து தள்ளாடித் தள்ளாடி நடந்தார்.

சாலைகளின் இருபுறமும் மக்கள் ஓடி வந்தனர். ஊர் முழுதும் தகவல் சட்டென்று பற்றி எரிந்தது. இயேசுவின் ஆதரவாளர்களும், சீடர்களும், இயேசுவை நேசிப்பவர்களும் சாலைகளின் இருபுறமும் திகில் அலையும் கண்களோடும், குமுறும் நெஞ்சத்தோடும் பார்த்துக் கொண்டே நின்றார்கள்.

அவர்களால் நம்ப முடியவில்லை. நேற்று வரை எல்லோருக்கும் பார்வை கொடுத்துக் கொண்டிருந்தவர், தொழுநோயாளிகளைக் குணமாக்கிக் கொண்டிருந்தவர், ஐந்து அப்பத்தை ஐயாயிரம் பேருக்குக் கொடுத்தவர், சிங்கம் போல சீடர்களுடன் உலா வந்து கொண்டிருந்தவர் இன்று என்ன ஆயிற்று. அது இயேசு தானா அல்லது வேறு யாரோவா? தண்ணீரில் கூட தடுமாறாமல் நடந்தவர், தரையில் நடக்க முடியாமல் தடுமாறுகிறாரே! மக்கள் அதிர்ச்சியின் உச்சத்தில் இருந்தார்கள்.

இருபுறமும் பெண்கள் ஒப்பாரி வைத்து அழுதார்கள்.

இயேசு தன்னைச் சுற்றியிருந்த மக்களின் பார்வைகளைப் பார்த்தார். பெண்களின் அழுகுரல் அவரைக் கரைத்தது. தன்னிடம் எஞ்சியிருந்த வலிமையை எல்லாம் ஒன்று திரட்டி பேசினார்.

'எருசலேம் மகளிரே... எனக்காக அழாதீர்கள். உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்'.

சொன்ன இயேசுவின் பார்வை கூட்டத்தினரிடையே அழுவதற்கும் திராணியில்லாமல் என்ன செய்வதென்றே அறியாமல் பித்துப்பிடித்து நின்ற ஒரு முகத்தின் மீதுபட்டது. அது அவருடைய தாயார்!

எந்த ஒரு தாயால் தன் மகனை இந்த கோலத்தில் பார்க்க முடியும்? காலில் கல் இடித்துவிட்டாலே கலங்கிப்போகும் தாய்மை மரணத்தைத் தோளிலேற்றி மகன் செல்வதை கண்டு கரையாமல் இருக்க முடியுமா?

அந்தப் பார்வையைத் தாங்க முடியாத இயேசு தடுமாறித் தரையில் விழுந்தார். பூமி அவருடைய இரத்தத்தைக் கொஞ்சம் துடைத்துக் கொடுத்தது.

மீண்டும் எழுந்தார். தொடர்ந்து நடந்தார். இயேசுவால் நடக்க முடியவில்லை. கொல்கொதா மலை இன்னும் தொலைவில் இருந்தது.

இயேசு மூன்றாவது முறையாகக் கீழே விழுந்தார். இனிமேல் எழும்புவதற்கு உடம்பில் வலு இல்லை. சிலுவையை யாராவது ஒருகை தூக்கி விட்டால் நன்றாக இருக்குமே, இயேசுவின் பார்வையில் தன்னுடைய பாரத்தைச் சுமக்கும் தோள்கள் ஏதாவது தென்படுகிறதா என்ற ஏக்கம்.

'இவனால் சிலுவையைத் தூக்கிக் கொண்டு நடக்க முடியாது. என்ன செய்யலாம்?'

'யாரையாவது பிடித்து சிலுவையைச் சுமக்கச் செய்வோம், இல்லையேல் இவன் மலையை அடையும் முன் மரணத்தை அடைந்துவிடுவான்.'

படைவீரர்கள் பேசிக் கொண்டே சுற்றுமுற்றும் பார்த்தார்கள். சீரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் அவர்களுடைய கண்களில் தட்டுப்பட்டான்.

'ஏய்... நீ யார்..'

'நான் சீமோன். சீரேன் ஊரைச் சேர்ந்தவன். எனக்கு இந்த மனிதனைத் தெரியாது... நான் ஒன்றும் அறியாதவன்' அவன் பயந்து நடுங்கினான்.

'எங்கிருந்து வருகிறாய்.'

'வயலில் வேலை செய்துவிட்டு வருகிறேன்.'

'சரி... சரி.. வந்து இவனுடைய சிலுவையைச் சுமந்து கொண்டு வா...'

'ஐயா... என்னை விட்டுவிடுங்கள். வேறு யாரையாவது அழையுங்கள்' சீமோன் நழுவப் பார்த்தார். சிலுவையில் அறையப்படுபவர்கள் தான் சிலுவையைத் தூக்கிச் செல்வார்கள். தான் சிலுவையைத் தூக்கிச் சென்றால் அந்த அவமானம் தனக்கும் வருமே என்று பயந்தாரோ அல்லது தான் இயேசுவின் மறைமுக ஆதரவாளர் என்பதை படை வீரர்கள் அறிந்து கொண்டார்களோ என்ற பயமோ சீமோனை நழுவச் சொன்னது.

அவர்கள் விடவில்லை. அவரைக் கட்டாயப்படுத்தி சிலுவையைச் சுமக்க வைத்தார்கள். இயேசுவுக்காகச் சிலுவையைச் சுமந்தான் சீமோன்.

கொல்கொதா மலை இயேசுவின் வருகைக்காகக் காத்திருந்தது. குற்றவாளிகளின் இரத்தம் சுமந்து சுமந்து அழுக்காகிக் கிடந்த கொல்கொதா மலையில் இயேசுவின் இரத்தத் துளிகள் விழுந்தன.

இயேசுவையும் சிலுவையையும் மலையுச்சியில் கொண்டுபோய் போட்டார்கள்.

இயேசுவை மட்டும் சிலுவையில் அறையாமல் அவருடன் இரண்டு கள்ளர்களையும் சிலுவையில் அறைந்து குற்றவாளிகளோடு குற்றவாளியாக அவரை நிற்கவைக்கவேண்டும் என்று ஏற்கனவே அலுவலர்கள் முடிவு செய்திருந்தார்கள். அந்த இரண்டு கள்ளர்களும் கூட இப்போது கொல்கொதா மலையுச்சியில் வந்து சேர்ந்தார்கள்.

இயேசுவுக்கு திராட்சை இரசத்தில் கசப்பைக் கலந்து ஒருவன் குடிக்கக் கொடுத்தான். இயேசு அதைக் குடிக்கவில்லை.

பெரிய நீளமான ஆணிகள் தயாராய் இருந்தன.

இயேசு சிலுவையில் கிடத்தப்பட்டார். அவருடைய கைகளை இழுத்து மரத்தோடு சேர்த்து ஆணிகளால் அறைந்தார்கள்.

பார்த்துக் கொண்டிருந்த கூட்டம் வீறிட்டு அலறியது. இயேசு வலியால் துடித்தார். இயேசுவின் கால்கள் இரண்டையும் சேர்த்து பாதங்களைத் துளைத்தபடி நுழைந்தது மூன்றாவது நீளமான ஆணி. சொல்லமுடியாத வலி இயேசுவைத் துடிதுடிக்க வைத்தது. தனக்கு ஆதரவாய்ப் பேச யாராவது வருவார்களா என்று இயேசுவின் கண்கள் பார்த்தன. கடைசிவரை யாரும் வரவேயில்லை.

ஒவ்வொரு கைதியையும் சிலுவையில் அறைந்த பின் சிலுவையில் அந்த கைதியின் பெயரை எழுதி வைப்பது வழக்கம். அதன்படி பிலாத்துவின் கட்டளைப்படி ''யூதர்களின் ராஜா'' என்னும் குறிப்பைத் தாங்கிய பலகை, சிலுவையில் இயேசுவின் தலைக்கு மேலாக அறையப்பட்டது.

பெயர்ப்பலகையைப் பார்த்த காய்பா எரிச்சலடைந்தான். பிலாத்துவின் முன்னிலைக்கு விரைந்தான்.

தொடரும்...

கிறிஸ்துவின் பணியில் ஆதரவு கரம் நீட்ட விரும்பினால் காசோலை (Cheque) அல்லது வரைவோலை / கேட்புக் காசோலை (D.D.) கீழ்க்கண்ட பெயரில் எடுத்து, எங்களது அலுவலக முகவரிக்கு பதிவஞ்சல் (Register Post) / தூதஞ்சலில் (Courier) அனுப்புங்கள். கூடுதல் தகவலுக்கு:




✆ 9003067777

G Pay 98406 95296

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | **ANTANTULLA APPAM TRUST** |
| ACCOUNT NO. | : | 048 201 000 010 247 |
| BANK NAME | : | **INDIAN OVERSEAS BANK** |
| IFSC CODE | : | IOBA0000482 |
| SWIFT CODE | : | IOBAINBB001 |
| BRANCH & CODE | : | MAHALINGAPURAM BRANCH & 482<br>CHENNAI - 600 034. |

# சிலுவை சுமக்கும் இயேசு கிறிஸ்து

**1-40 புள்ளிகளை இணைத்து அழகான வண்ணம் தீட்டவும்.**



Q&A

# இந்திய தேசத்தின் சுதந்திர போராட்டத்தில் கிறிஸ்தவர்களின் பங்கு என்ன?

- அம்மு, திருவள்ளூர்

சகோதரியே, உங்கள் மின்னஞ்சல் கண்டேன். நானும் எனது கல்லூரி காலத்தில் கிறிஸ்தவரல்லாத எனது நண்பரிடமிருந்து இதே போன்றதொரு கேள்வியை எதிர்கொண்டேன். கிறிஸ்தவர்களுக்கும் இந்த மண்ணிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லாதவர்கள் போலவும், ஏதோ பெத்லகேமிலிருந்து இந்திய கிறிஸ்தவர்கள் வந்தவர்கள் போலவும் இங்கிருப்பவர்கள் கருதிக்கொண்டிருப்பது அபத்தமான ஒன்று. இதுகுறித்து இணையத்தில் நான் தேடிப்படித்தவைகளை உங்களுடன் பகிர்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

**வர்கீஸ் மாப்பில்லா**

Felix Wilfred என்கிற ஓர் வரலாற்று ஆசிரியர் இந்தியாவின் சுதந்திரத்தின் கிறிஸ்தவர்களில் பங்கு என்னவென தெளிவாக ஆதாரத்தோடு எழுதிவைத்துள்ளார். சுதந்திர தேசத்திற்காக பாடுபட்ட மிஷனரிகளில் முக்கியமானவர்கள் ஸ்டான்லி ஜோன்ஸ், C.F.அன்றூஸ், J.C.வின்ஸ்லோ, வர்ரியர் எல்வின், ரால்ப் ரிச்சர்ட் கைதாஹ்ன் மற்றும் எர்னெஸ்ட் போர்றேச்டார்-பேடன். இவர்கள் ஆங்கிலேய காலனி ஆதிக்கத்தை நேரடியாக எதிர்த்தவர்கள். இந்திய தேசம் இந்தியர்களுக்கே என்று முழங்கியவர்கள். பல மிஷனரிகள் இதனால் ஆங்கிலேயர்களால் நாடுகடத்தப்பட்டனர். இதன் மத்தியிலும் பல கிறிஸ்தவர்கள் ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்து உயிர்விட்டனர். பலரும் ஆங்கிலேயர்களால் தான் கிறிஸ்தவம் இந்திய தேசத்திற்குள்ளே வந்தது என்று கதைகட்டி நரிகளைப்போல் தெருவெங்கும் ஊளையிடுகின்றனர். கிறிஸ்தவம் 2000 ஆண்டுகளுக்கு முன்பே 'பரிசுத்த தோமா' என்கிற கிறிஸ்தவ சீஷர் மூலம் வந்துவிட்டது. இன்றும் இவர் சரித்திரம் சொல்லாத ஏடுகள் இல்லை. அந்நிய ஆதிக்கம் 17ம் நூற்றாண்டுகளில் தலைதூக்கியது. அன்று வரை கிறிஸ்தவம் இந்தியத்தேசத்தில் பலவிதங்களில் சொல்லப்பட்டுவந்தது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.



ஜார்ஜ் தாமஸ் என்கிற கிறிஸ்தவர், இந்திய தேசிய காங்கிரஸ் சுதந்திரபோராட்டத்தில் குதித்த ஆரம்ப நாட்களில், இந்திய கிறிஸ்தவ சமுதாயம் (1885) என்கிற ஓர் அரசியல் சார்ந்த ஓர் கூட்டத்தை சேர்த்து சுதந்திர போராட்டத்தில் குதித்தார். 1887ம் ஆண்டு இந்திய காங்கிரஸ் தாக்கல் செய்த மூன்றாம் அரசியல் சாசனத்தில் 607 பேர் கலந்துகொண்டனர். இதில் 15 பேர் கிறிஸ்தவர்கள் (கிறிஸ்தவர்கள் மக்கள் தொகை எண்ணிக்கை மிக குறைவு). இதில் முக்கியமானவர்கள் ஒரிசாவை சார்ந்த மது சுதன் தாஸ் (1848-1934), பெங்காலி கிறிஸ்தவர் காளி சரண் பேனர்ஜி (1847-1907) என்பவர்கள். இவ்விருவரும் தேசிய அரசியலில் காங்கிரசோடு இணைந்து பல அரசியல் சாசனங்களை தாக்கல் செய்தனர்.

1889ம் ஆண்டு நடைபெற்ற முக்கியமான கருத்தரங்கில் கலந்துகொண்ட 10 பெண் தலைவர்களில் 3 பேர் கிறிஸ்தவ தலைவர்கள். இவர்கள் பண்டித ரமாபாய் சரஸ்வதி (1858-1922), திருமதி திரயும்புக் மற்றும் திருமதி நிகம்பே.

ஸ்வராஜ் இயக்கம் (1905), the ஒத்துழையாமை இயக்கம் (1920), the Civil Disobedience Movement (1930) மற்றும் வெள்ளையனே வெளியேறு இயக்கம் (1942) பல ஆயிரக்கணக்கான இந்திய கிறிஸ்தவர்கள் கலந்துகொண்டு தங்கள் உயிரை கொடுத்துள்ளனர். பலர் குடும்பத்தை பிரிந்து சிறையில் மாண்டனர்.

1920ம் வருடம் ஆரம்பித்து பல கிறிஸ்தவ இயக்கங்கள் ஆங்காங்கே சபைகள், கிறிஸ்தவ கல்லூரிகள், அரசியல் சார்பு இயக்கங்கள் உருவாகி சுதந்திர தேசத்திற்காக பாடுபட்டனர். அனைத்திந்திய கிறிஸ்தவ மாநாடு, தேசிய கிறிஸ்தவ ஆலோசனை சபை (the National Christian Council of இந்தியா), ஒருங்கிணைந்த கிறிஸ்தவ சாஸ்திர கல்லூரி (United Theological College (Bangalore)) சார்பாக உருவாகின கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் வாலிப மாணவ குழுக்கள், பெங்கால் செரம்பூர் கல்லூரி (Serampore College) (Bengal), புனித பவுல் கல்லூரி, கொல்கத்தா (St. Paul's College, Calcutta (Bengal)), கேரளா மலபார் கிறிஸ்தவ கல்லூரி (Malabar Christian College), Calicut (Kerala), கிறிஸ்தவ வாலிப ஆலோசனை மற்றும் செயல்படுத்தல் குழு (கேரளா) (the Youth Christian Council of Action (Kerala)), இந்திய கிறிஸ்தவ மாணவ இயக்கம் (the Student Christian Movement of India), இந்திய கிறிஸ்தவ கழகம், பெங்கால் (the Indian Christian Association of Bengal, கிறிஸ்தவ கூடுகைகள், மும்பை (conference of Christians in Bombay), இந்திய கிறிஸ்தவ கூட்டம், பாளையம்கோட்டை மற்றும் திருநெல்வேலி (Meeting of Christians in Palayamcotta and Tirunelveli) போன்றவற்றின் மூலம் பல இடங்களில் சபைகள் மூலமாக கிறிஸ்தவர்கள் ஆங்கிலேய காலனி ஆதிக்கத்திற்கு எதிர்த்து நின்று இரவு பகல் பாராமல் போராடினர். சில இடங்களில் முன்வந்து போராட்டம் நடத்தி தங்கள் எதிர்ப்பை பதிவு செய்தனர்.

1973ம் ஆண்டு தமிழ்நாடு அரசு சுதந்திர போராட்ட தியாகிகள் பெயரை வெளியிட்டது. அதன் தலைப்பு 'யார் சுதந்திர போராட்டத்தில் பங்கேற்றது, தமிழ்நாடு' "Who is Who of Freedom Fighters, Tamil Nadu" இதில் ஈ.ஆர்தர் ஜெயகுமார் (D.Arthur Jayakumar) மற்றும் 103 பேர் கிறிஸ்தவர்கள் என்று குறிக்கப்பட்டுள்ளது. இந்திய தேசிய அளவில் சுதந்திர போராட்டத்தில் பங்கேற்ற கிறிஸ்தவர்களில் ஈ.ஆர்தர் ஜெயகுமார் அவர்களின் பங்களிப்பு அளவிடமுடியாதது யாராலும் மறுக்கமுடியாத உண்மை.

## J.C. குமரப்பா

J.C.குமரப்பா (உண்மையான பெயர் ஜான் ஜேசுதாசன் கொர்நெலேயு, (1892-1960), முக்கியமான காங்கிரஸ் தலைவர். ஹார்வர்ட், ஒகியோ, கொலம்பியா போன்று பல இடங்களில் படித்து பட்டம் பெற்ற இவர் லக்னோவில் உள்ள கல்லூரியில் தத்துவ ஞான சாஸ்திர பேராசிரியராக இருந்தார். சுதந்திர தாகம் கொண்ட இவர் அண்ணல் காந்தியை 9 மே 1929 அன்று சபர்மதி ஆசிரமத்தில் சந்தித்த பின் அவர் நெருங்கிய நண்பர் ஆனார். இவர் 'சத்தியக்ரஹம்' போராட்டத்தில் கலந்துகொண்டு பல கிறிஸ்தவ இயக்கங்களை இதனோடு இணைத்தார்.

காந்தி அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 'எங் இந்தியா' என்கிற பத்திரிக்கையின் ஆசிரியரானார். 1942ம் ஆண்டு 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் மும்பை, நாக்பூரில் கிளர்ச்சியை ஏற்படுத்தினதால் ஜபல்பூர், மத்திய பிரதேசம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். இரண்டரை ஆண்டுகள் சிறையில் இருந்தார்.



பவுல் ராமசாமி (1906) மற்றொரு முக்கியமான கிறிஸ்தவர். காந்தியின் உப்பு சத்தியாக்ரஹ போராட்டத்தில் கலந்துகொண்டு பிஷப் ஹீபர் கல்லூரியை மையமாக வைத்து செயல்பட்டார். பின்னை ஆங்கிலேயர்களால் கைதுசெய்யப்பட்டு திருச்சி, அல்லிபுரம் சிறைச்சாலைகளில் வாடினார். வெங்கல் சக்கரி (1880) காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கிய நபராக செயல்பட்டவர். 1930ம் வருடம் லண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் K.T. பவுல் அவர்கள் கலந்துகொண்டு விடுதலை முழக்கமிட்டார்.

லக்னௌவில் நடைபெற்ற அனைத்திந்திய கிறிஸ்தவர்கள் மாநாட்டிற்கு (1922, டிசம்பர் 27-30) பிறகு 'ஒத்துழையாமை' இயக்கத்தில் கிறிஸ்தவர்களின் பங்களிப்பு அதிகமாக இருந்தது. இதன் பிறகு அதிகமான கிறிஸ்தவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். ஆதாரம்: 1930 The editor of The Guardian. N.H. துப்ஸ் பிஷப் கல்லூரி முதல்வர், கொல்கத்தா, நிறத் பிஸ்வாஸ் (பிஷப் அஸ்ஸாம் சபைகள்) ஆகிய இருவரும் 1932ம் ஆண்டு உப்பு சத்தியாக்ரஹ போராட்டத்தில் தங்களை இணைத்துகொண்டனர்.

1930 மற்றும் 1940ம் ஆண்டுகளில் கிறிஸ்தவ தலைவர்களான T.M. வர்கீஸ், A.J. ஜான், மச்காறேனேஷ் மற்றும் அக்கம்மா செரியன் ஆரம்ப நாட்களில் முக்கியமானவர்கள். திருவேன்கொர் காங்கிரஸ் தலைவர்களில் பிலோப்போஸ் ஏலஞ்சிக்கள் ஜான் (1903-1955) முக்கியமானவர்.

## J. அல்வா மற்றும் வியோலேட் அல்வா

கிறிஸ்தவ குடும்பங்கள் பல இணைந்து சுத்திர தேசத்திற்காக போராடினர். முக்கியமாக திரு J. அல்வா Joachim Alva (1907-1979). இவர் கிறிஸ்தவ வாலிப இயக்கத்தின் முன்னோடி. சுதந்திர போராட்டத்தில், தான் பார்த்துவந்த பணம்கொழிக்கும் வேலையை தூக்கிஎறிந்து வந்தார். திருமதி வியோலேட் அல்வா (1908-1969). கணவனும், மனைவியுமாக இணைந்து பல இடங்களில் சுதந்திர வேட்கையை தீயாய் பரப்பினர்.

இதை ஒரு ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தை சேர்ந்த ஓர் பத்திரிகை எழுத்தாளர் M.V.காமத் அவர்கள் ஒப்புகொண்டிருக்கிறார். தன் சுயசரிதையில் கிறிஸ்தவர்களில் பங்களிப்பு பற்றி தெளிவாக குறிப்பிட்டுள்ளார். திரு ஜோசிம் அல்வா (Joachim Alva), மார்செல் (Marcel A. M. D'Souza) ஆகியோரை பற்றி சிப்ரியன் அல்வறேஸ் (Cyprian Alvares) புத்தகத்தில் கிறிஸ்தவர்கள் பங்களிப்பு தேசிய அளவில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதையும் குறிப்பிட்டுள்ளார்.



கிறிஸ்தவ மிஷனரிகள் ஆரம்பித்த பள்ளிகூடங்கள், கல்லூரிகள் விடுதலை வேட்கையை பக்குவமாக மாணவர்களிடத்தில் கல்வியோடு சொல்ல பெரும்பங்கு கொண்டுள்ளது. பல கிறிஸ்தவ கல்லூரிகள் விடுதலை போராட்டத்தில் நேரடியாக குதித்துள்ளது இதற்கு ஓர் பெரிய சான்றாகும். ஜார்ஜ் ஜோசப் (George Joseph (1887-1938) was another outstanding Christian who

engaged in the freedom struggle). 1918ம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற விடுதலை போராட்ட கருத்தரங்கில் கலந்துகொண்டது மூலம் இந்திய கிறிஸ்தவர்கள் தேசிய விடுதலைக்காக போராடுகின்றனர் என்பதை உலகிற்கு உணர்த்தினார். இவர் வக்கீல் தொழிலுக்கு படித்தவர். திருமதி அன்னி பெசண்ட் அம்மையார் நடத்தின அரசியல் கூட்டமைப்பில் பங்குகொண்டு சுதந்திர போராட்டத்தில் பங்கு கொண்டார். வாலிப நாட்களில் சுகத்தை தூக்கி எறிந்துவிட்டு ஒத்துழையாமை இயக்க ஆரம்பநாட்களில் கலந்து கொண்டார். அந்நிய பொருட்களை வாங்கமாட்டோம் என்று முழங்கினார். 1920ம் ஆண்டு ஆங்கிலேய அரசு இவரை அலகாபாத் சிறையில் அடைத்தது. பின்னர் காந்திஜி அவர்கள் நடத்திவந்த ‘எங் இந்தியா’ 'Young India' பத்திரிகையில் ஆசிரியராக மாறினார். இவர் நேரு, மகாதேவ் தேசாய், புருஷோட்டம்தாஸ் டாண்டன், தேவதாஸ் காந்திஆகியோரோடு ஒன்றாக லக்னொவ் சிறையில் இருந்தவர். பின்னர் காங்கிரஸ் கட்சியில் முக்கிய தலைவராக உருவெடுத்தார். ஜவஹர்லால் நேரு அவர்கள் தன் சுயசரிதையில் ஜார்ஜ் ஜோசப் அவர்களை பற்றி குறிப்பிட்டுள்ளார்.

C. சாமுவேல் ஆரோன் மற்றும் அவர் துணைவியார் திருமதி கிரேசி ஆரோன் அவர்களின் பங்களிப்பு பலரை விடுதலை போராட்டத்தில் குதிக்க வைத்தது. உப்பு சத்தியாக்கிரக போராட்டம் மலபாருக்கு வந்தபோது இவர் குடும்பம்தான் முன் நின்று வழிநடத்தியது. தன் சொந்த கட்டிடத்தை இப்போராட்டத்திற்கு இலவசமாக கொடுத்து முன் நின்றவர். இவர் எந்நேரமும் கொலை செய்யப்படலாம் என்று அப்போதைய அதிகாரி E.M.கவனே மிரட்டினார். 1930ம் ஆண்டு காங்கிரஸ் தடைசெய்யப்பட்ட போது இவரும் கைதானார். ரூபாய் ஆயிரம் அபராதம் அல்லது 6 வார சிறை என்ற நிலை வந்தது. தன்னுடன் போராடிய பாமர மக்கள் சிறையில் வாடும் போது இவர்மட்டும் வெளியில் இருக்க மனம் வரவில்லை. பணம் கட்ட மறுத்து சிறைத்தண்டனையை ஏற்றார்.


இது மட்டும் அல்ல. கிறிஸ்தவ பத்திரிக்கைகளும் சுதந்திர போராட்டத்திற்கு ஆதரவாக வெளிவந்தன. அதிகமாக மலையாள மொழியில் கிறிஸ்தவ பத்திரிக்கைகள் வெளிவந்தன. Rajya Samacharam published by the Basel Mission (1987), Paschimodayam (1987), கொச்சியை மையாமாக கொண்ட Paschima Taraka (1862-1863), Satyanada Kahalam (எர்ணாக்குளம்), வார பத்திரிகை Satyanadam, கோட்டயத்தை மையமாக கொண்டு வெளிவந்த Nazrani Deepikaa (1987), Malayala Manorma Company (1888) இன்றும் இந்த பத்திரிக்கை புகழ் பெற்றதாகும். இதை ஆரம்பித்தவர் ஒரு கிறிஸ்தவர். பெயர் Varghese Mappilla Kandathil (1858-1904). பின்னர் இது Malayala Manorama (1890 onwards) என்று பெயர் பெற்றது. இப்படி கிறிஸ்தவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பல பத்திரிக்கைகள் அரசியலையும், விடுதலை வேட்கையையும் பலநிலைகளில் தூண்டியது. இவைகளில் பங்களிப்பு மிகபெரிய வெற்றியை தேடித்தந்தது.

அந்நாட்களில் கிறிஸ்தவர்கள் எண்ணிக்கை மிகக்குறைவு. ஆனால் இவர்கள் பங்களிப்பு மிகப்பெரியது. கிறிஸ்தவர்களாகிய நாம் இதனை முழுமையாக தெரிந்து கொள்ளவேண்டும். இதனை உங்கள் சந்ததிக்கு எடுத்து சொல்லுங்கள். விடுதலை போராட்டத்தில் மட்டும் அல்ல, தீண்டாமை ஒழிப்பு, பெண் தீக்குளிப்பு, குழந்தைகள் திருமணம் போன்ற பலவற்றையும் எதிர்த்துநின்று வெற்றிகண்டனர்.

ரோமர் 13:1தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. இப்படி அரும்பாடுபட்டு பெற்ற சுதந்திர இந்தியாவின் அமைதிக்காக தொடர்ந்து ஜெபிப்போம். நம் தேசத்திற்கு சமாதானம், நிம்மதி, ஷேமம் வேண்டும் என்றால் கிறிஸ்தவர்களாகிய நாம் ஜெபிக்க வேண்டும். இந்த ஜெபத்தை தேவன் கேட்டு கால் மிதிக்கும் தேசமெல்லாம் கர்த்தருக்கு சொந்தமாக்கி தருவார். ஆமென்.

# “நானே நல்ல மேய்ப்பன்” என்று சொன்ன இயேசுவிடம் ஆடு செல்ல சரியான வழிகாட்டுங்கள்.

நானே வாசல், என் வழியாய் ஒருவன்
உட்பிரவேசித்தால், அவன்
இரட்சிக்கப்படுவான், அவன்
உள்ளும் புறம்பும் சென்று,
மேய்ச்சலைக் கண்டடைவான்.
யோவான் 10:9



# அறிவோம் பின்னணி

மதப்பணிகளுக்காக 19-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நெல்லைக்கு வந்த ரெயினீஸ் ஐயர், அப்பகுதி மக்களுக்காகப் பாடுபட்டார். ஒரு மாணவனின் கல்வி, அவனுடைய சந்ததியைப் பாதுகாக்கும் என்பதை வலியுறுத்தினார். அதனால் 18 வருடங்களில் 105 கல்வி நிலையங்களைத் தொடங்கினார்.

பெண்களுக்குக் கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்ட காலகட்டத்தில், பாளையங்கோட்டையில் இஸ்லாமியப் பெண் குழந்தைகள் படிப்பதற்காக தனியாகக் கல்வி நிலையம் தொடங்கப்பட்டது. அந்தப் பள்ளியில் இஸ்லாமியக் குழந்தைகள் மட்டுமே சேர்க்கப்பட்டு கல்வி அளிக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஆண், பெண் என இருபாலரும் படிக்கும் பள்ளியாகச் செயல்பட்டு வருகிறது.

பாளையங்கோட்டையில் உள்ள சி.எஸ்.ஐ கல்வி நிறுவனங்களின் அலுவலகத்தில் ஆனிபேன் ஆக்ஸ்வித் என்னும் ஆசிரியர் 1887ம் ஆண்டு நெல்லை மாவட்டத்தின் கல்லூரி ஒன்றில் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தபோது வெளியே பரட்டைத் தலையுடன் வந்த ஒரு சிறுவனை அழைத்துள்ளார். அந்தச் சிறுவன் பிச்சை எடுக்க வந்திருப்பதாக நினைத்து ஆனி அவனிடம், ‘‘தம்பி இது கல்வி வழங்கும் இடம். உணவு வழங்கும் இடமல்ல. எனவே நீ வேறு இடத்திற்குச் சென்று பிச்சையெடு’’ என்றார்கள்.

பதில் அளித்த ஆனிஜேன் ஆக்ஸ்வித்திடம், பார்வையற்ற பையன் மறுமொழியாக, தான் படிக்க வந்திருப்பதாகத் தெரிவித்துள்ளார். அதனால் ஆனிஜேன் அவமானம் அடைந்துள்ளார்.

அந்த கேள்வி ஆனியின் உள்ளத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்த கேள்வியின் தாக்கத்தால் அவனுக்கு கல்வி புகட்ட ஆரம்பித்தார். அது பள்ளியாக வளர்ந்தது. பிற்காலத்தில் மிகப்பெரிய பார்வையற்றோர் பள்ளியாக உருவெடுத்தது.

1888-ம் வருடம் கல்வி கற்க வந்த சுப்பு என்கிற அந்தப் பார்வையற்ற சிறுவனுக்குக் கற்பிப்பதற்காக இங்கிலாந்து சென்று ப்ரெய்ல் முறையிலான கல்வியைக் கற்றுத் திரும்பிய அவர், ஒரு பள்ளியைத் தொடங்கியிருக்கிறார். அதுவே பார்வையற்றோருக்கான நாட்டின் இரண்டாவது பள்ளியாகும். இப்போது அந்தப் பள்ளியில் ஐந்நூற்றுக்கும் அதிகமான பார்வையற்ற மாணவ மாணவிகள் கல்வி கற்று வருகிறார்கள். சிறுவன் கேட்டான். பெற்றுக் கொண்டான்.



அழுகின்ற குழந்தைக்குத் தான் பால் கிடைக்கும் என்ற பழமொழி நம் ஊரில் உண்டு. அதற்காக அழாமல் இருக்கும் குழந்தை பட்டினியிலேயே வாழும்.

சிறிய தரிசனம், பெரிய அருட்பணிகளை நிறைவேற்றும். ஆகவே கனவு காணுங்கள். அந்த கனவும் தேவனுடைய இராஜ்ஜியத்திற் கேற்றதாக இருக்கட்டும்.

# ஐடா ஸ்கடர்



நெரிசலிலும், வெப்பத்திலும் சிக்கித் தவிக்கும் இந்தியாவை விட்டு வெளியேறுவதே நல்வாழ்வின் தொடக்கமென கருதினார் ஐடா ஸ்கடர். ஐடாவிடம் நல்வாழ்க்கையின் உதாரணம் கேட்போருக்கு அவரது மாறாத பதில், 'அமெரிக்காவும், கோடீஸ்வரருடன் திருமணமும்' என்பது தான். இந்தியாவில் நிலவிய பஞ்சமும், தெருவோரம் கிடக்கும் பிணங்களும் தான் இந்தியாவை குறித்து ஐடாவின் நினைவில் நின்ற பிம்பங்கள். 'இந்தியா' ஒருபோதும் தனக்கு ஏற்ற நாடல்ல என்பது ஐடாவின் கணிப்பு. அவளது கணிப்புகள் எல்லாம் பரமனின் அழைப்பில் மங்கி பின் மறைந்தது.

அப்போது அவள் இந்தியாவில் தொண்டாற்றி வரும் தன் தந்தையோடு விடுமுறையை கழிக்க வந்திருந்தாள். அகல்கள் ஒளியை வீசிக்கொண்டிருக்கும் அறையில் புத்தகத்தை புரட்டிக் கொண்டிருந்த ஐடாவின் காதுகளில் சிலரது காலடியோசை வெளித் திண்ணையில் இருந்து வந்தெட்டியது. புத்தக பார்வையை கலைத்துவிட்டு கதவருகே வந்து எட்டிப் பார்த்தாள். அங்கு பிராமணர் ஒருவர் பிரசவ வலியால் துடித்துக்கொண்டிருக்கும் தன் 14 வயது மனைவியை காப்பாற்ற வரும்படி வேண்டினார். ''அம்மா! மருத்துவச்சிகள் கை விரித்து விட்டனர். எப்படியாவது என் மனைவியையும், பிள்ளையையும் காப்பாற்றுங்கள்'' என்று கதறினார். ஐடா மகப்பேறுவில் அகரம் கூட அரியாதவள், எனவே ''என் தந்தை ஒரு சிறந்த மருத்துவர். அவர் வீட்டிற்கு வந்ததும் அவரை அழைத்து வருகிறேன்'' என்றாள். ''ஒரு அந்நியஆண் என் இல்லத்திற்குள் நுழைவதைக் காட்டிலும், அவள் இறப்பதே மேல்'' என்று மறுத்து வெளியேறினார் பிராமணர். அந்த ஏழைப்பெண்ணுக்காக வருந்தினார் ஐடா. அவளால் வேறு என்ன செய்ய முடியும். கனத்த மனதுடன் புத்தகத்திற்குத் திரும்பினாள் ஐடா.

சிறிது நேரத்தில் ஐடாவின் தந்தை வீடு திரும்பினார். நடந்ததை சொல்லி வருத்தமடைந்தாள் ஐடா. மீண்டும் காலடியோசை கேட்டது. பிராமணர் மறுபடியும் வந்திருப்பார் என்று நினைத்த ஐடா வாசலருகே ஓடோடி வந்தாள். ஆனால் அங்கோ ஒரு இஸ்லாமியர் பிரசவ வலியால் துடித்துக்கொண்டிருக்கும் தன் மனைவிக்கு உதவி செய்ய வருமாறு ஐடாவை அழைத்தார். ஐடா ஒரு தேர்ச்சி பெற்ற மருத்துவரல்லாததால் ஐடாவின் தந்தை வந்து உதவுவதாக கூறினார். இதை கேட்ட இஸ்லாமியர் ''என் மனைவியின் முகத்தை எனது குடும்பத்தாரைத் தவிர வேறு எந்த ஆணும் கண்டதில்லை. அப்படி இருக்க அயல்நாட்டவரான உங்களை என்னால் அனுமதிக்க முடியாது'' சொல்லி மறுத்துவிட்டார். அவரது மனதை மாற்ற முயன்ற ஐடாவிற்கும் அவள் தந்தைக்கும் தோல்வியே மிஞ்சியது.

வேறுவழியின்றி மறுபடியும் புத்தகத்தை தொடர்ந்த ஐடாவிற்கு மீண்டும் காலடியோசை கேட்கவே, திகிலோடும் குழப்பத்தோடும் சென்று பார்த்தாள். மூன்றாவதாக ஒரு உயர் குல இந்து மனிதர் தன் மனைவியின் பிரசவத்திற்கு ஐடாவை அழைத்தார். ஐடாவுக்கு அனுபவம் இல்லாததால் அவரது தந்தை வருவதாக தெரிவித்தார். ''வேண்டாம்; என் மனைவி சாகட்டும்'' என்ற அதே பதில் தான் இந்த முறையும் வந்தது.

‘‘அந்த இரவு என்னால் தூங்க முடியவில்லை... அது ஒரு பயங்கரமான இரவு. ஒரு பெண் உதவிக்கு இல்லாததால் இங்கே மூன்று பெண்களின் உயிர் பிரிந்து கொண்டிருக்கிறது. ஆனால் எனது அமெரிக்க தோழிகள் உல்லாச வாழ்விற்கு தொடர் அழைப்பு விடுத்துக் கொண்டிருந்தனர். என்னால் அவர்களின் அழைப்பை நிராகரிக்க முடியவில்லை. அந்த இரவு வேண்டுதலிலும் வேதனையிலும் மட்டுமே நகர்ந்தது. அடுத்த நாள் காலை எனது எதிர்காலம் குறித்து தேவனுடைய விருப்பதை அறிந்து கொள்ள ஜெபத்தில் அமர்ந்தேன். என் வாழ்வில் முதல் முறையாக தேவனின் சத்தத்தை தெளிவாக உணர்ந்தேன். அந்த நேரமெல்லாம் தேவன் தமது ஊழியத்திற்கு என்னை அழைக்கிறார் என்பதை புரிந்துகொண்டேன்.

ஜெபத்தை முடித்து எழுந்த போது, தாரை தப்பட்டை சத்தம் கேட்க தொடங்கியது. உடனே எனது உள்ளத்தை திகில் தொற்றிக் கொண்டது. அது நிச்சயமாக யாரோ ஒருவருடைய மரண செய்தி என்பது எனக்கு தெரியும். வேலைக்காரர்களில் ஒருவனை கிராமத்திற்குள் அனுப்பி அந்த மூன்று பெண்களின் நிலையை விசாரித்து வருமாறு அனுப்பினேன். மூவருமே இறந்துவிட்டதாக விசாரித்து வந்தவன் கூறினான். எனது அறையை மறுமடியும் மூடிவிட்டு அழுதேன், இந்திய பெண்களின் நிலையை குறித்த பாரம் என் உள்ளத்தை ஆக்கிரமித்தது. நீண்ட நேர ஜெபத்திற்கு பின்னர் ‘‘நான் அமெரிக்கா செல்லவே தீர்மானித்தேன். ஆம்! அமெரிக்கா சென்று மருத்துவம் படித்து மீண்டும் இந்தியாவுக்கே வந்து அவல நிலையில் இருக்கும் பெண்களுக்கு தொண்டாற்றுவதே இறைவனின் நோக்கம் என்பதை புரிந்துகொண்டேன்..

ஐடா உயர்ந்த கல்லூரிகளில் பயிலும் வாய்ப்பை பெற்றார். நன்கு பயிற்சிபெற்ற மருத்துவராக ஐடா இந்தியா திரும்பினார். பெண்களுக்கான மருத்துவமனை ஒன்றை வேலூரில் நிறுவ வேண்டுமென விரும்பினார். எதிர்பாராத விதமாக ஐடாவிற்கு மருத்துவர் லூயிசா ஹர்ட்டிடமிருந்து கடிதம் வந்தது. அதில் வேலூரில் மருத்துவமனை அமைக்கப் பணம் தேவைப்படுகிறதா? பதில் எதிர்பார்த்துக் காத்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஐடாவிற்கு அந்த மூன்று பெண்களின் நினைவு வந்தது, இந்தியாவில் சுவர்களுக்கு பின்னால் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் பெண்களின் அவலத்தை நினைத்தார். ஆம் பெண்களுக்கான மருத்துவமனை இங்கு உடனடி தேவை, நல்ல மருத்துவமனை கட்டுவதற்கு $50,000 தேவைப்படும் என்று பதில் எழுதினார்.

$50,000மா!! என்று பலரும் வாயைப் பிளந்தனர். அத்தொகையின் தற்போதைய மதிப்பு $500,000. $8000 திரட்டுவது சாத்தியமானது. ஆனால் உங்களால் அதில் பாதி பணத்தை கூட திரட்ட முடியுமா என்பது சந்தேகம் தான் இருந்தாலும் முயற்சி செய்யுங்கள் என்றனர். பலரும் தன்னை தாழ்வாக நினைப்பதை புரிந்து கொண்டார் ஐடா. அவர்களது எண்ணம் தவறு என்றும் பணம் தேவைப்பட்டால் அதைத் தர தேவனால் இயலும் என்றும் பதில் எழுதினார்.

ஐடா தானே நிதி திரட்ட முற்பட்டார். ‘யானை பசிக்கு சோளப் பொறி’ என்பதைப்போன்று சிறு துளியாய் டாலர்கள் வந்து சேர்ந்தன. இந்தியாவின் தேவை அதிகரித்துக்கொண்டே போனது. 10,000 மக்களுக்கு ஒரு மருத்துவர் என்ற விகிதம் தான் நிலவியது. பாரம்பரிய மருத்துவர்களிடம் சிறந்த மருந்துகள் இருந்தாலும் அதில் பெரும்பாலானவை பக்க விளைவை ஏற்படுத்தக்கூடியவை. இந்தியாவில் மருத்துவத்திற்கான அவசர தேவையை உணர்ந்தார். ஆனால மருத்துவமனை கட்டி முடிக்க குறைந்தது இரண்டாண்டுகள் பிடிக்கும். ஆகவே ஒரு சிறு அறையை தற்காலிக மருத்துவமனை ஆக்கினார். திண்ணை காத்திருக்கும் அறையாக பயன்பட்டது. அவள் நோயாளிகளை நன்றாக கவனித்த போதிலும் சந்தேகம் தமிழ் இந்தியர்களை ஐடாவிடம்

சிகிச்சை பெறுவதற்கு தடை செய்தது. அவளது முதல் சிகிச்சை தோல்வி அடைந்தது. ஐடாவிடம் சென்ற நோயாளி இறந்துவிட்டார் என்ற செய்தி வேகமாக பரவியது. பலரது சந்தேகம் வலுத்தது.

இறுதியாக ஒரு உயர்ந்த ஜாதி இந்துப்பெண் கண் சிகிச்சைக்காக வந்திருந்தார். இம்முறை ஐடா வெற்றிகரமாக சிகிச்சை செய்து குணமாக்கினார். அதன்பின் அவளது சேவையின் தேவை அதிகரித்தது. சலொமி என்ற அவளது வீட்டு சமையல் பணிப்பெண் தான் ஐடா பயிற்சியளித்த முதல் செவிலியர். நாளொன்றுக்கு 100, 200, 300, 400, 500 என்று ஐடாவிடம் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்தது.

அமெரிக்கா, ஐரோப்பா நாடுகளில் உள்ள மொத்த மருத்துவர்களையும் கொண்டு வந்து சேவை செய்தாலும் ''சமுத்திரத்தை காயத்தால் உரசியது'' போலதான் இருந்தது அன்றைய தேவை. இந்தியப் பெண்களுக்கு சேவை செய்ய இந்திய பெண்களுக்கே பயிற்சி அளிக்கவேண்டுமென்று தீர்மானித்த ஐடா வேலூர் செவிலியர் பாடசாலையை உருவாக்கினார். செவிலியருக்கு பயிற்சியளிக்கத் தன்னால் கூடுமானால் மருத்துவருக்கும் பயிற்சி அளிக்கக் கூடுமென்று நம்பினார் ஐடா. மீண்டும் நம்பிக்கை ஜெயித்தது. வேலூர் மருத்துவக் கல்லூரி உருவானது. அது சுலபமாக நடக்கவில்லை. காலம் செல்லச் செல்ல நெருக்கடியின் விளிம்பிற்கு வந்தார் ஐடா. ஆனால் கடவுள் எப்பொழுதும் போலக் காப்பாற்றினார். இக்கட்டான நிலை ஒன்றில் ஐடா எழுதினார் ''முதலில் நன்கு சிந்தனை செய்; பின்பு துணிந்து செய்; உண்மைகளை தெரிந்துகொள்; செலவை மதிப்பிடு; பணம் முக்கியம் அல்ல; நீ கட்டிக்கொண்டிருப்பது மருத்துவக் கல்லூரியல்ல; அது கடவுளின் ராஜாங்கம்'' இது கடவுளின் விருப்பமென்றால் கடவுளே கல்லூரியைத் திறந்து வைப்பார் என்ற நம்பிக்கையின் பலனாய் கல்லூரி தொடங்கியது.

தன் பாதத்தில் படிந்த இந்தியாவின் தூசியை தட்ட விரும்பிய அந்த பெண் பின்னாளில் இந்தியர்களின் இதய சிம்மாசனத்தில் இடம்பிடித்தார். பிரிட்டிஷ் மற்றும் இந்திய அரசாங்கம் அவருக்கு உயர்ந்த விருதுகளை வழங்கியது. காந்தியடிகள் அவரை தேடி வந்து சந்தித்தார். ஐடா சர்வதேச புகழ் பெற்றார். ஐடாவின் கடவுள் நம்பிக்கை அழிவில்லாதது. அதுவே அந்த மருத்துவச்சியின் மதிப்பிற்குரிய சான்றாக இன்றளவும் காலங்களை கடந்து நிலைநிற்கிறது, அவளது இறை நம்பிக்கையே அவளை விசித்திர மருத்துவச்சியாக்கி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.



ஆல்பிரட் டென்னிசன்
(1809 - 1892)

**பரிசுத்த வேதாகமம் வாசிப்பது, தன்னைத்தானே பரிசோதித்துக் கொள்வதாகும்.**

# இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் தொடர்புடைய சொற்களை கண்டு வட்டமிடுக.

கல்வாரி
சிலுவை
முள் கிரீடம்
இரத்தம்
சிலுவை
கொல்கொதா
யூதாஸ்
இருள்



பிலாத்து
உயிர்த்தெழுதல்
கள்ளர்கள்
கல்லறை
மூன்று நாள்
வீரர்கள்
சீமோன்
இயேசு கிறிஸ்து

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சி | இ | யே | சு | கி | றி | ஸ் | து | இ | சீ |
| லு | பி | இ | ர | த் | த | ம் | த் | ரு | க |
| வை | லா | க | வை | ரி | மோ | த | யூ | ள் | ல் |
| யி | த் | ல் | வீ | ர | ர் | க | ள் | ஸ் | ல |
| த | து | வா | க | ள் | ள | ர் | க | ள் | றை |
| இ | றை | ரி | க | மூ | ன் | று | நா | ள் | கொ |
| யூ | உ | யி | ர் | த் | தெ | ழு | த | ல் | ல் |
| தா | ல் | த | ர | இ | பி | சீ | மோ | ன் | கொ |
| ஸ் | யி | மு | ள் | கி | ரீ | ட | ம் | யி | தா |

# வரலாறு

கி.மு. 167-ல் இஸ்ரவேல் நாடு சீரியா தேசத்தின் கீழ் இருந்து வந்தது. அப்போது, மத்தியாஹூ (Mattiyahu) என்னும் யூத ஆசாரியரை அவருடைய ஊராகிய மோடி என்னுமிடத்தில் சீரிய இராணுவம் பிடித்து, தங்கள் தெய்வமாகிய ஜீயஸ் (Zeus) என்னும் கடவுளுக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, மத்தியாஹூவையும், அவருடய ஐந்து மகன்களையும் அதை வணங்கச் சொல்லி வற்புறுத்தினார்கள். அதற்கு மத்தியாஹூ மறுத்ததுமன்றி, அந்த பலிபீடத்தை தைரியமாக இடித்துப் போட்டு, வற்புறுத்திய வீரனையும் கொன்று விட்டு, பக்கத்தில் இருந்த மலைக்கு தன் மகன்களோடும் இன்னும் சில யூதர்களோடும் தப்பி ஓடினார்.

இந்த சிறிய குழுவினர் மக்காபீஸ் (Meccabees) என அழைக்கப்பட்டனர். அவர்கள் சீரிய இராணுவத்திற்கு எதிராக போர்க் கொடி உயர்த்தி தங்களிடமிருந்த கம்புகளையும், விவசாயத்திற்கு வைத்திருந்த இரும்பு சாமான்களையும் வைத்து, அவர்களோடு போரிட்டு, தேவன் அவர்களுக்கு உதவினபடியால் அற்புதமாக வெற்றி பெற்று, எருசலேமையும் தேவாலயத்தையும் மீண்டும் கைப்பற்றினார்கள். சீரியர்கள் தேவாலயத்தை மிகவும் மோசமான நிலையில் அசுசிப்படுத்தியிருந்தபடியால், அதை சுத்தம் பண்ண ஆரம்பித்தார்கள். தேவனுடைய கட்டளையின்படி குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்க வேண்டும். அதனால் முதலில், குத்துவிளக்கை எடுத்து, அதை எரிய விட ஆரம்பிக்கும்போது, துரதிஷ்டவசமாக, அதற்கு தேவையான ஒலிவ எண்ணெய், ஒரு நாளைக்கு மட்டுமே போதுமானதாக இருந்தது. இருக்கும்வரை எரியட்டும் என்று நினைத்து, அவர்கள், தேவாலயத்தை விடாமல் சுத்தம் செய்ய ஆரம்பித்து, செய்துக் கொண்டிருந்தபோது அதிசயமாக அந்த குத்துவிளக்கிலிருந்த எண்ணெய் குறைந்துப் போகவே இல்லை. எட்டு நாட்களுக்கு அந்த எண்ணெய் போதுமானதாக, அந்த விளக்கு தொடர்ந்து எரிந்துக் கொண்டே இருந்தது. அவர்கள் மீண்டும் எண்ணெய் கொண்டு வரும்வரை எட்டு நாட்களுக்கு அது போதுமானதாக இருந்தது.



அதை நினைவுகூர்ந்து, ஒவ்வொரு வருடமும், இஸ்ரவேலர் ஹனுக்கா (Hanukkah) என்னும் பண்டிகையை எட்டுநாட்களுக்கு கொண்டாடுகிறார்கள். ஹனுக்கா பண்டிகை இந்த நாளில் மூன்றாவது நாளாக கொண்டாடப்படுகிறது. ஹனுக்கா என்பதற்கு Feast of Dedication என்பது பொருளாகும். தேவாலயத்தை திரும்ப சுத்தப்படுத்தி தேவனுக்கு என்று அர்ப்பணித்ததால் அதற்கு அர்ப்பணிப்பின் பண்டிகை என்றுக் கொண்டாடப்படுகிறது.

# நடமாடும் நிரூபம்

பலர் பரிசுத்த வேதாகமத்தை படிப்பதில்லை மாறாக கிறிஸ்தவர்களின் வாழ்க்கையை வாசித்துக்கொண்டிருக்கிறார்கள். முதல் கிறிஸ்தவர் கொல்லப்பட்ட, ஒரிசா கந்ரஹம் பகுதியில் கிறிஸ்தவர்கள் தங்கள் இடிந்து போன வீடுகள் முன்பாக இயேசு கிறிஸ்துவை ஆடி பாடி கொண்டாடுகின்றனர். இப்பகுதியில் ஏற்பட்ட கலவரத்தில் அநேகர் கொல்லப்பட்டார்கள்.

இக்கலவரத்தில் முதன் முதலாக எரிக்கப்பட்டவர் சகோதரர் ரசனந்த் பிரதான். இவருடைய சகோதரர் இரபின்றா பிரதான் - ஐ வீட்டோடு வைத்து எரித்து விட்டார்கள். தேவனின் அநாதி தீர்மானத்தினால் உயிர் பிழைத்த இவர் கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தை அறிக்கையிட தன் கிராமத்து மக்களோடு தயாராகி வருகிறார்கள்.

‘என் சகோதரர் தன் உயிரை இழந்தது வீணாய் போய்விடவில்லை. புதிதாக இந்து மதத்தை சேர்ந்தவர்கள் எங்கள் சபை ஆராதனையில் கலந்து கொண்டுள்ளனர்’ என்று கூறுகிறார். இந்த பகுதியில் பல கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டார்கள். வீடுகள் தீக்கிரையாக்கபட்டன.. ஆனாலும் உயிர் பிழைத்த கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை யாரும் ஒன்றும் செய்ய முடியவில்லை. சொந்த குடும்பத்தில் பலரை இழந்தாலும் கிறிஸ்துவை இழந்து விடவில்லை. மறுதலிக்கவும் இல்லை. தொடர்ந்து தேவனை ஆராதித்து வருகின்றனர்.



இவர்களின் விசுவாசத்தை, தைரியத்தை, கொன்றவர்களை மன்னிக்கும் தேவ அன்பை கண்ட பல இந்து குடும்பங்கள் இன்று இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்று கொண்டுள்ளனர். சிலுவையின் அன்பு இன்றும் பல கலவரக்காரர்களை மாற்றி வருகிறது. தேவனுக்கே நன்றி. அவரால் கூடாத காரியம் ஒன்றும் இல்லை. கிறிஸ்துவுக்கு பின் இதுவரை பல கோடிக்கணக்கான பேர் கொல்லப்பட்டும் கிறிஸ்தவம் இன்றும் மேலோங்கி நிற்பதற்கு காரணம் சிலுவையின் அன்பை ஒவ்வொரு கிறிஸ்தவனும் உலகுக்கு வெளிப்படுத்தி கொண்டிருக்கிறான். இந்த தேவ அன்பு தான் இன்று பல புறமதத்தை சேர்ந்தவர்களை கிறிஸ்துவின் மந்தையில் இணைத்து வருகிறது.

இந்த அன்பிற்கு நீங்களே சாட்சி. இந்த தெய்வத்திற்கு நம் வாழ்க்கை சாட்சி. பலர் பரிசுத்த வேதாகமத்தை படிப்பதில்லை. ஆனால் அவர்கள் கிறிஸ்தவர்களை, அவர்களின் வாழ்க்கையை படித்து வருகின்றனர். சாட்சியாக வாழ்வோம். தேவனின் நாமத்தை உயர்த்துவோம். ஆமென்.

மத்தேயு 10:28. ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.

# கமல் சலீம்

1957ஆம் ஆண்டு லெபனானில் பிறந்த இவர் ஒரு சன்னி முஸ்லிம் ஆவார். அதோடு சலீம் ஒரு தீவிர யூத விரோதியாவார்.

இன்றோ, கமல் சலீம் அரசியல்வாதிகளுக்கும், ராணுவ தலைவர்களுக்கும், உள்துறை நிபுணர்கள், பாதுகாப்பு அதிகாரிகள், சட்ட வல்லுனர்கள், தொண்டு நிறுவனங்கள், ஆலயங்கள், வழிபாட்டு தலங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் வரவேற்கும் பண்புடைய முகமதிய மக்களுக்கும் போதித்து வருகிறார்.

4 வயது குழந்தையாய் இருக்கும் போதே இவருடைய தாயார் அமெரிக்கர்களையும், யூதர்களையும் கொன்று குவித்து முகமதிய சமயத்திற்காக உயிர் துறக்கும் தியாகியாக மாற வேண்டும் என்று போதிக்கப்பட்டார்

7 வயதில் முதற் முயற்சியாக ஆயுதங்களை கடத்தும் குழந்தையாக அப்போதைய பாலஸ்தீன தீவிரவாத தலைவர் யாசர் அராபாத்துக்காக செயல்பட்டார்.

15 வயதில் வெடிமருந்துகளில் மன்னனான இவர், லிபிய முன்னாள் அதிகாரியான முகமது கடாபியின் ஆட்சிகாலத்தில் அங்குள்ள பாலைவன தீவிரவாத முகாம்களில் உள்ள தீவிரவாதிகளுக்கு பயிற்சி கொடுத்து வந்தார்.

வாலிபனான போது இவரின் தீவிரவாத மூர்க்கம் அதிகரித்தது. பாரிஸ், லண்டன், ஆப்கானிஸ்தான், செல்வ செழிப்புள்ள அரபு ஷேக்குகளிடம் சென்று தீவிரவாத இயக்கங்களுக்கு தேவையான நிதிகளை திரட்டி வந்தார். உலகம் முழுவதும் தீவிரவாத தாக்குதல்கள் நடத்துவதே இதன் அடிப்படையாகும். அதன் பிறகு அமெரிக்கா சென்று அங்குள்ள நலிந்த மக்களை தன்னுடைய திறமையால் முகமதிய மதத்திற்கு மாற்றினார்.

இதன் மத்தியில் ஓர் நாள் கொடுமையான விபத்தொன்றில் சிக்கினார். இவர், இவரின் இயக்கங்களுக்கு பணம் திரட்டிய போதும் தன்னை பற்றியோ, குடும்பத்தை பற்றியோ கவலை பட்டதில்லை. மருத்துவ காப்பீடோ, குடும்பத்தில் போதிய பணமோ இல்லாததினால் படுத்த படுக்கை ஆனார். இவரை கவனிக்க ஆளில்லாமல் மிகவும் வருத்தப்பட்டார். இவருடன் பிறந்தவர்கள் 13 பேர்.




கிறிஸ்தவர்களின் அன்பு இவரின் மனதை மாற்றியது. இவருக்கு மருத்துவம் பார்த்த மருத்துவர் தேவனை அதிகமாக நேசிப்பவர். இவரை காப்பாற்றின கிறிஸ்தவர் கமல் சலீமை தன்னுடைய வீட்டில் தங்கச் சொன்னார். கமல் சலீம் குணம் அடைய கிறிஸ்தவ கூடுகைகளில் ஜெபம் செய்யப்பட்டது. இவருக்காக காணிக்கையும் எடுத்தார்கள். இதை பார்த்த கமல் சலீமின்

மனம் உடைந்தது. அல்லாவிடம் ஜெபம் செய்தார். தீவிரவாத முகாம்களில் அன்பை பற்றி போதித்திராத காரணத்தினால் இவர் கிறிஸ்தவரின் அன்பை புரிந்து கொள்ளவில்லை. ஏன்? அல்லா தன்னை கைவிட்டு விட்டாரோ? ஏன் என்னை இந்நிலைமைக்கு ஆளாக்கினார் என்று இவர் கேள்விக்கு அல்லாஹ்விடம் இருந்து பதில் வரவில்லை.

'அல்லாஹ், என்னை ஏன் எதிரிகள் கைகளில் ஒப்படைத்தாய்?' இவர் அல்லாஹ்வின் அற்புதத்தை பார்க்க விரும்பினார். 'அல்லாஹ்.. நீர் இருப்பது உண்மையானால், நான் உன் குரலை கேட்க வேண்டும்' என்று கதறினார். ஒன்றும் நடக்கவில்லை.

அந்நேரத்தில் இவரின் மனதில் 'ஏன் நாம் ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன், யாக்கோபின் தேவனை கூப்பிடக்கூடாது?' என்ற கேள்வி எழுந்தது. அது முதல் 'யேகோவா தேவனை' நோக்கி கூப்பிட ஆரம்பித்தார். அப்போது ஆணிகள் கடாவபட்ட இரு கரங்களை இவருக்கு முன்பாக பரிசுத்த தேவன் காண்பித்தார்.




கமலின் சுயசரிதை நூல் இது:

இயேசு கிறிஸ்து கமல் சலீமிடம் பேச ஆரம்பித்தார். அவரின் இனிய குரலை முதன் முதலாக கமல் சலீம் கேட்டார். பரிசுத்த தேவன் தான் கமல் சலீமை எவ்வளவாக நேசிக்கிறார் என்பதை அன்போடு, கனிவோடு பகிர்ந்து கொண்டார். அதன் பிறகு கமல் சலீமின் காயங்கள் முழுவதும் ஆறிப்போனது. அதிசயத்தின் தேவன் மீண்டும் ஓர் சவுலை பவுலாக மாற்றினார்.

வேதாகமத்தை வாசிக்க வாசிக்க தேவன் தன்னிடம் பேசுவதை உணர்ந்தார். இன்று கமல் சலீம் அரசியல்வாதிகளுக்கும், ராணுவ தலைவர்களுக்கும், உள்துறை நிபுணர்கள், பாதுகாப்பு அதிகாரிகள், சட்ட வல்லுனர்கள், தொண்டு நிறுவனங்கள், ஆலயங்கள், வழிபாட்டு தலங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் வரவேற்கும் பண்புடைய முகமதிய மக்களுக்கும் போதித்து வருகிறார்.

எபிரெயர் 12:1. ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.

# சிலுவையை சுமந்து செல்லும் சிலுவைநாதர் இயேசு

**இரண்டு படங்களுக்குமிடையே உள்ள 5 வேறுபாடுகளை கண்டுபிடிக்கவும்.**





விடைகள்: 1. வீரனின் ஆடை, 2. சுவற்றில் துவாரம், 3. வீரனின் கால், 4. மேகம், 5. வீரனின் தலைப்பாகை

# ஐந்து விரல் ஜெபம்

நாம் அனைவரும் ஜெபிக்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் எப்படி ஜெபிப்பது என்று ஒரு சிலருக்கு தெரிவதில்லை. சோர்ந்து போகாமல் ஜெபிக்க வேண்டும் என்பது தேவனுடைய கட்டளையாதலால் நாம் தொடர்ந்து ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இங்கு நாம் மனதில் வைத்து கொண்டு ஜெபிக்க தக்கதாக எளிதான முறையில் ஞாபகம் வைக்க சில குறிப்புகளை தருகிறோம். அதை பின்பற்றி நாம் எளிதாக ஐந்திலிருந்து பத்து நிமிடங்கள் ஜெபித்துவிடலாம். நாம் கார் ஓட்டும் போது சிக்னலுக்காக காத்திருக்கும்போதோ, வேலை ஸ்தலத்தில் சிறிது ஓய்வெடுக்கும்போதோ, இந்த சிறிய ஜெபத்தை நாம் செய்யலாம். நமது கரத்தை எடுத்து கொள்வோம். அதை ஜெபிக்க கூப்பும்போது,

1. முதலாவது நமக்கு அருகில் இருப்பது பெருவிரல்: பெருவிரல் நமக்கு அருகில் இருப்பதால், நமக்கு நெருங்கிய உறவினர்கள், நெருங்கிய நண்பர்கள், நமக்கு நெருங்கிய ஊழியர்கள் என்று நெருங்கியவர்களுக்காக ஜெபிக்கலாம். நமது ஞாபகத்தில் அவர்கள் இருப்பதால் அவர்களை நினைத்து எளிதாக ஜெபிக்கலாம். மற்றும் பெருவிரல் முதல் விரலாக இருப்பதால், தேவன் ஏற்படுத்திய ஊழிய முறைப்படி முதல் ஊழியமாகிய அப்போஸ்தல ஊழியத்தை செய்பவர்களுக்காக ஜெபிக்க வேண்டும்.

2. இரண்டாவதாக இருப்பது சுட்டிகாட்டும் விரல்: நமக்கு போதிக்கும் ஆசிரியர்கள், நமக்கு உடல் நிலையை சுட்டிகாட்டி வழிகாட்டும் வைத்தியர்கள் என்று இவர்களுக்காக ஜெபிக்கலாம். மற்றும் சுட்டி காட்டும் விரல் நீ செய்வது தவறு என்று ஒருவரை சுட்டி காட்டி திருத்துவதால், திருத்தும் ஊழியத்தை செய்யும் கிறிஸ்துவுக்குள் உண்மையான தீர்க்கதரிசிகளுக்காக ஜெபிக்க வேண்டும்.

3. மூன்றாவது இருப்பது உயரமான விரல்: அது நம்மை ஆள்பவர்களையும், நமக்கு மேலான யாவரையும் குறிக்கிறது. நமது ஜனாதிபதி, பிரதம மந்திரி, மற்ற மந்திரிகள், முதன் மந்திரி, நமது வேலையிடத்தில் நமக்கு மேலாக இருப்பவர்கள், இவர்களை ஞாபகத்தில் கொண்டு வந்து ஜெபிக்கலாம். சுவிசேஷ வேலை செய்பவர்கள் பிரதான வேலையை செய்வதால் அவர்களை இந்த நேரத்தில் நினைவில் கொண்டு வந்து ஜெபிக்க வேண்டும்.

4. நான்காவது இருப்பது மோதிர விரல்: இதை பெலவீன விரல் என்றும் சொல்வார்கள். பியானோ கற்று கொடுப்பவர்களுக்கு தெரியும். இந்த விரல் பெலவீனமானது என்று. ஆகவே நமது சமுதாயத்தில் பெலவீனமானவர்களை, வியாதியில் இருப்பவர்களை, கஷ்டத்தில் இருப்பவர்களை நினைத்து ஜெபிக்க வேண்டும். அதை போல, மோதிர விரல் மேய்ப்பர்களை குறிக்கிறது. சபைகளை மேய்க்கின்ற பாஸ்டர்களை நினைத்து நாம் ஜெபிக்க வேண்டும்.

5. கடைசியில் இருப்பது சுண்டு விரல்: சுண்டு விரல் நம்முடைய தேவைகளை குறிக்கிறதாக இருக்கிறது. இப்போது நமது தேவைகளை கர்த்தரிடம் சொல்லி கடைசியாக நமக்காக ஜெபிக்க வேண்டும். நமக்கு காதில் ஏதாவது குடையும்போது, இந்த சுண்டு விரலே நம் காதிற்குள் சென்று குடைய வைக்க முடியும். அதுப்போல சுண்டு விரல் போதகர்களை குறிக்கிறது. அவர்களின் போதகமே நமது காதிற்குள் செல்லுகிறபடியால், நாம் இந்த சமயத்தில் போதகர்களை நினைத்து ஜெபிக்க வேண்டும்.

’பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை

அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்' (எபேசியர் 4:12-13) என்று கர்த்தர் கொடுத்த ஊழிய முறையை நாம் இந்த இடத்தில் பார்க்கிறோம். இவைகளை நாம் ஒவ்வொரு விரலுக்கு ஈடாக நினைத்து, அந்த ஊழியம் செய்பவர்களுக்காக ஜெபிக்கும்போது, கர்த்தருடைய இராஜ்யம் பரவுவதற்கும், பரிசுத்தவான்கள் சீர் பொருந்தும் பொருட்டும் நாம் தொடர்ந்து ஜெபிப்பதற்கு ஏதுவாகும். அதினால் கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்.

நாம் தினமும் இத்தகைய ஜெபத்தை ஒரு ஐந்து நிமிடங்கள், அல்லது பத்து நிமிடங்கள் ஜெபிக்கும்போது அது எத்தனை பெரிய மாற்றத்தை சபைகளில் ஏற்படுத்தும்! நமது தேசத்தில் ஏற்படுத்தும்! தினமும் நமது விரல்களை நினைவு கூர்ந்து ஜெபித்து, தேசத்தையும் சபைகளையும் ஜெபத்தால் அசைப்போமாக! தேவனின் நாமம் மகிமைப்படுவதாக! ஆமென்.



# அன்பைப் பகிர்ந்து வாழ்வோம்

ஒரு முறை நியாயப்பிரமாண நூல்களைக் கரைத்துக் குடித்திருந்த நியாயசாஸ்திரி ஒருவர் இயேசுவிடம் ஒரு கேள்வியைக் கேட்டார்.

''நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது ?''

பழைய ஏற்பாட்டைப் புரட்டிப் பார்த்தால் 613 கட்டளைகள் உண்டு. யூதர்களைப் பொறுத்தவரை இவை எல்லாமே மிக முக்கியமானவை, கடைபிடிக்கப்பட வேண்டியவை.

இயேசு என்ன சொல்லப்போகிறார்? அவர் ஒன்றைச் சொன்னால் இன்னொன்றைச் சொல்லி அவரை மடக்கலாம் என அவர்கள் காத்திருந்தார்கள்.

இயேசு அமைதியாய்ச் சொன்னார்: ''நியாயப்பிரமாணத்திலுள்ள அத்தனை கட்டளைகளையும் இரண்டே இரண்டு கட்டளைகளில் அடக்கி விடலாம். 1) ''உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆன்மாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக. 2) உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக. எல்லா கட்டளைகளுக்கும் அடிப்படை இவை தான்'' என்றார்.

கிறிஸ்தவத்தின் தலையாய கட்டளைகள் இவை தான். ''தேவனை நேசி, மனிதனை நேசி.''

... தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? (1 யோவான் 4 20)

இதில் மிகவும் வியப்பான விஷயம் என்னவென்றால், 'மனிதனை அன்பு செய்வது தேவனை அன்பு செய்வதற்கு சமம்' என்று சொன்ன இயேசு, 'தேவனை அன்பு செய்வது மனிதனை அன்பு செய்வது போல' என சொல்லவில்லை.

இன்னும் கொஞ்சம் ஆழமாய்ச் சிந்தித்தால் உண்மையான அன்பு உள்ளத்தில் நிறைந்திருந்தால், நமது செயல்கள் எல்லாமே அன்பின் வெளிப்பாடாய் அமைந்திருந்தால் அதுவே மிகச்சிறந்த கிறிஸ்தவ வாழ்வு என்கிறார் இயேசு.

நற்செய்தியை அறிவிப்பதையோ, ஆராதனைகளை நடத்துவதையோ, போதனைகள் செய்வதையோ, ஏன் விசுவாசத்தையோ கூட இயேசு முன்னிலைப்படுத்தவில்லை. அன்பை மட்டும் முன்னிலைப்படுத்துகிறார்.

அன்புக்கு முன்னால் சாதீய, இன வேறுபாடுகள் அடிபட்டுப் போகின்றன. மத, திருச்சபை நிகழ்வுகள் பின் வரிசைக்குச் சென்று விடுகின்றன என்பதை எல்லாம் 'யார் அயலான்' எனும் கதையில் இயேசு விளக்குகிறார்.

எல்லாம் இருந்தாலும், அன்பு இல்லாவிட்டால் ஒன்றுமே இல்லை. விண்ணகத்திற்கான நுழைவுச்சீட்டும் அன்பின் செயல்களைச் செய்பவர்களுக்கு மட்டுமே கிடைக்கும் என்பதை இயேசு மிக ஆழமாகப் பதிவு செய்கிறார்.

தேவன் அன்பாய் இருக்கிறார். நாம் அன்பின் செயல்களைச் செய்து, அன்பின் வடிவமாய் மாறும்போது தான் நாம் இறை சாயலை அணிந்து கொள்கிறோம். நமது சொல், செயல், சிந்தனை எல்லாமே அன்பை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும்.

கட்டளையைப் புரிந்து கொள்வோம். அன்பைப் பகிர்ந்து வாழ்வோம்.

# இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்.

சங்கீதம் 147:3





என்னைச் சுமந்த
சிலுவையை
என்னில் சுமப்பதில்
இருக்கிறது
சிலுவைப் பலியின்
வெற்றி!



தாகமாய் இருக்கிறது!
சிலுவையின் உச்சியில்
இயேசு கதறினார்!

அவரது
தாகத்தைத் தீர்க்கும்
ஒரே வழி
அவரை நாம்
அருந்துவதுதான்!

நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக.

கலாத்தியர் 6:14

Elim
GLORIOUS REVIVAL CHURCH

ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்

# புனித வெள்ளி ஆராதனை



பரிசுத்த பந்தி அநுசரிக்கப்படும்

9 AM - 1 PM

29 MAR 2024





நோம்பு கஞ்சி உண்டு

Pastor
OSBORNE JEBADURAI

ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்

50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் சென்னை-600024

9884908777, 9003067777

அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்
மத்தேயு 28:6

## ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்

Elim
GLORIOUS REVIVAL CHURCH

# ஈஸ்டர் தின ஞாயிறு ஆராதனை

MAR 31 2024



| | | |
|---|---|---|
| 1 | முதல் ஆராதனை | 5:00 – 6:45 |
| 2 | இரண்டாம் ஆராதனை | 7:00 – 8:45 |
| 3 | மூன்றாம் ஆராதனை | 9:00 – 11:15 |
| 4 | நான்காம் ஆராதனை | 11:30 – 1:00 |
| 5 | மாலை ஆராதனை | 6:30 |

ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் சென்னை-600024
9884908777, 9003067777